# சங்க அகப்பொருள் சூழல் மரபில் திருவாய்மொழி

***ப. கலைவாணி***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
(திருவள்ளுவர் பல்கலைக் கழக இணைவுப் பெற்ற)
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி, மயிலம்
https://doi.org/10.5281/zenodo.14383132

**ஆய்வுச்சுருக்கம்**
*திருமங்கை ஆழ்வாரை வைணவப் பெரியோர்கள் பரகாலன் எனப் போற்றுவார்கள். கொங்கு மலர் குழலியர் கோன், கொற்றவேல், பரகாலன், கலியன், ஆலிநாடன், அருள்மாரி என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்ற திருமங்கை ஆழ்வார் பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கைத், சிறியதிருமடல், பெரிய திருமடல் எனும் ஆறு பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார். இவர் இயற்றிய திருவெழு கூற்றிருக்கை, திருக்குறுந்தாண்டகம் தவிர ஏனையவை அகப்பொருள் செய்திகள் செறிந்து காணப்படுகின்றன. இவர் பிரபந்தங்கள் யாவும் நம்மாழ்வாரை அடியொற்றி அமைந்திருக்கின்றன. இவற்றில் காணலாகும் அகமரபுகள் சங்க இலக்கியங்களோடு ஒப்புமைப்படுத்தி ஆய்வதாக .இவ் ஆய்வானது அமைகின்றது.*

## பெரிய திருமொழியில் அகப்பொருள்

*தலைவி தலைவனது செயல்களை எண்ணிப் புகழ்தல், தலைவன் பிரிவால் புலம்புதல், இதன் காரணமாக அஃறிணைப் பொருள்களான கொக்கு, குருகு, வண்டினங்களை தூதாகச் செல்லுமாறு அறிவுறுத்துதல் மேலும் தலைவனைப் பிரிந்த துயரால் தோழி, தாயிடம் புலம்புகிறாள். இறைவனான தலைவனின் உருவ வெளிப்பாடு தோற்றம் பெற்றதைக் கண்டு தலைவி உடல் நலிவு முதலானவை பெறுதல் தலைவி கூற்றில் முதலிடம் பெறுகின்றன.*

## தலைவி கூற்று

*தலைவனை (இறைவன்) தலைவி (ஆழ்வார்) அடைய முற்படும்போது ஏற்படும் உள்ளக்கிடக்கைக்களை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. தலைவனை இடைவிடாது நினைத்து அவனது உருவ எழில் கண்டு தோழி, தாயிடும் தன்னிலையை வெளிப்படுத்திக் கூறுகின்றாள். இதனைத் தொல்காப்பியர்,*

***வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்***
***ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்***
***நோக்குவ எல்லாம் அவையே போறல்***
***மறத்தல் மயக்கஞ் சாக்காடு என்றிச்***
***சிறப்புடை மரபினவை களவென மொழிப***
***(தொல்.பொருள்.)***

*என்ற நூற்பா களவிற்குப் பொதுவிலக்கணமாக கூறப்பட்டுள்ளது. இவ்வகையிலேயே பெரிய திருமொழிப் பாசுரங்கள் அமைந்துள்ளன. தலைவி தலைவனைப் பிரிந்து வருதுவதே கூற்றாக அமைந்துள்ளது. தலைவனைப் புணர்ந்த பின்பு பிரியும் துயரம் காரணமாக தலைவனை எண்ணி துன்பமுறுகிறாள் தலைவி. பக்தி இலக்கியங்களில் காணலாகும் அகமரபுப் பாடல்களில் பெரும்பாலும் தலைவி, தோழி, நற்றாய், செவிலி, பாங்கள், கட்டுவிச்சி முதலானோர் கூறும் கூற்றுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. தலைவன் கூற்று அரிதாகவே கிடைக்கின்றது. தலைவனையே இறைவனாக முன்னிறுத்தி பாசுரங்கள் ஆழ்வார்களால் இயற்றப்பட்டுள்ளன.*

**தலைவி தலைவனது உருவ வெளிப்பாடு காணுதல்**

இறைவனான தலைவனை எவ்விதமாக அறியப் பார்த்தாலும் அறிய முடியவில்லை.[2] தேன் சொரியும் மாலையில் வண்டுகள் ரீங்காரமிடும் துழாய்மாலை மேனியை உடையவன்.[3] தலைவனைக் கண்டவுடன் கைவளையல்கள் கழன்று விழுகின்றன. என் மனமும் இறைவனிடமே உள்ளது. எனினும் இறைவனை அறிய முடியவில்லை.[3] என்று தலைவி கூறுகிறாள்.

***மேவிஎப் பாலும்விண் ணோர் வணங்க***
***வேதம் உரைப்பர்முந் நீர் மடந்தை***
***தேவி அப் பால்அதிர் சங்கப் இப்பால்***
***சங்கரம் மற்றிவர் வண்ணம் எண்ணில்***

**(பெரிய திருமொழி.2.88)**

எனத் தலைவி தலைவனின் வடிவழகை காயம்பூ, நீலம், மேகம் போல கரிய நிறத்தனவாகவும், ஓவியத்திலும் காணாத திருவுருவைக் கொண்டவனாக இறைவன் காட்சி தலைவின் பால் புலம்புவதை அறிந்து கொள்ள முடிகின்றது. இறைவன் பால் கொண்ட காதலால் திருநாகையில் உறைந்திருக்கும் சௌறத்ராசனின் அழகில் ஈடுபட்டுப் பாடியுள்ள பாசுரங்களிலும் இறைவனின் தோற்றப் பொலிவு கூறப்பட்டுள்ளது.[6]

***கஞ்சனை யஞ்சமுன் கால்வி சைத்த***
***கானைய ராவர்கண் டார்வணங்கும்***
***அஞ்சன மாமலை யேயும் ஒப்பர்***
***அச்சோ ஒருவர் அழகியவா!***

**(பெரி.திரு.4.2.6)**

என இறைவனின் உருவ எழில் அழகினை எடுத்துக் கூறியுள்ளார். உருவ வெளிப்பாட்டைப் பற்றிக் கூறிய தலைவி, தன் தோழியர்க்கு தலைவனைப் புணர்ந்து பிரிந்தபின்பு, தலைவன் கூறியவற்றையும், தலைவன் ஊர்னைப் பற்றியும் கூறுகிறாள் இயற்கை எழில் கொஞ்சும்அழகுடன்மிளிர்வதைதலைவி வியந்து கூறுவதைக் காணமுடிகின்றது. மேலும் திருவாய்மொழியானது தலைவனின் பதி எழிலுடன் இருப்பதை காணமுடிகின்றது. உருவவெளிப்பாடு தோற்றம் காணுதல் அகஇலக்கிய மரபில் தலைவனுக்குரிதாக ஐயம் முதல் சாக்காடு ஈறாக தொல்காப்பியம் கூறுகின்றது. பக்தி இலக்கியத்தில் தலைவனைப் பிரிந்த தலைவி தலைவனுடைய உருவ வெளிப்பாடு தோற்றத்தைக் கண்டு தோழியிடம் கூறுவதை அறியமுடிகின்றது.

**உருவம் வெளிப்பட்டு நீற்றல்**

தலைவனைப் புணர்ந்து பிரிந்த தலைவி இயற்கை எழில் சூழ்ந்த திருக்கண்ணபுரத்தில் எழுந்தளியிருக்கும் இறைவனை எண்ணி உடல்மெலிந்து கைவளையல்கள் யாவும் கழன்று விழுந்து விட்டன.[12] உயர்ந்த மடல்களைக் கொண்ட தாழைச் செடிகளின் பக்கங்களில் வளர்கின்ற பவழங்கள் மேடுகளில் படர்ந்து இருக்கும் திருக்கண்ணபுரத்தில் உறைந்திருக்கும் இறைவனை எண்ணி தன்னுடைய ஒளி வளையல்களை இழந்து வாடுகின்றேன் எனத் தலைவி இரங்குகின்றாள்.

***தூங்கமா மணிமாட நெடுமுகட்டின் சூலிகைபோம்***
***திங்கள்மா முகில் துணிக்கும் திருக்கண்ண புரத்துறையும்***
***பைங்கண்மால் விடையர்த்துப் பனிமதிகோல் விடுத்துகந்த***
***செங்கண் மால் அம்மானுக்கு இழந்தேன்என் செறிவளையே***

**(பெ.திரு.3.)**

எனத் தலைவி. இரங்கிக் கூறும் பாடல்கள் நெஞ்சில் நிற்கும் வண்ணம் அமைந்துள்ளன. பரகால நாளகி தலைவனை எண்ணி வருந்து வதால் தென்றல் காற்றுப் நெருப்பாய் வீசுகின்றது. மேகம், சந்திரன் போன்றவை என்மீது படும்போது மென்மைத் தன்மையை விடுத்து கோபத்தைக் காட்டுவது போல்உள்ளது எனத் தலைவி புலம்புகிறாள்.[16] மன்மதன் ஓய்வு இல்லாமல் அம்புகளைத் தொடுத்து என் உயிரை இலக்காகக் கொண்டு எய்கின்றான். தலைவனான இறைவனின் வாகனமாக உள்ள கருடன் மீது ஏறிவர நான் விரும்பியதற்குத் தண்டனையாக அமைந்துள்ளதை எண்ணி. வருந்துகின்றாள். என்ற பாசுரத்தில் தலைவி தானுற்ற விரக வேதனையை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் பதினோரம் பத்தில் 2, 3 ஆம் திருமொழிகள் தலைவி தலைவனது புகழை விதந்து வெளிப்படுத்தி நெஞ்சம் இரங்கிக் கூறுகிறாள்.

இதனைத் தொல்காப்பியர்,

**உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி**

**(தொல்.பொருள்.4)**

என்ற நூற்பாவில் ஒருவரை உயர்த்திச் சொல்லும் மொழிகள் தலைவனுக்கும் தலைவிக்கும் உரிமை உடையது எனக் கூறுகிறார். இவ்வாறு பெரிய திருமொழியில் தலைவி தலைவனைப் புகழ்ந்துரைப்பதை காண முடிகின்றது. இலக்கணநூலார் மரபுப்படி காட்சி, ஐயம், குறிப்பறிதல், தெளிதல் ஆகியவை தலைவனுக்குரிய நிலைகளனாகக் கூறப்படுகிறது. ஆனால் பெரிய திருமொழியில் தலைவிக்குரிய மரபாக கூறப்படுகின்றதே தவிர, தலைவனுக்குரியதாக கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. திருமங்கை ஆழ்வார் பரகால நாயகியாக தன்னைப் பாவித்துக் கொண்டு தலைவனது (இறைவன்) வடிவழகைக் கொண்டு உருவ வெளிப்பாடு தோற்றத்தைப் பற்றி விவரித்துள்ளது. குறிப்பிடத்தக்கது. பக்தி இலக்கியப் பாடல்களின் பிரிவு ஆன்மாக்கள் இறைவனை அடைந்து பேரின்பம் பெறுதலே ஆகும். தலைவி தலைவனைப் பெற விரும்பும் நிலையும், தலைவனை பிரிந்து வருந்தி இரங்குதலும், இறைவனை அடைய எண்ணியே தலைவி கூற்று நிகழ்த்துவதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## தலைவி தூது விடுதல்

தூது விடுப்பது சங்க இலக்கியம் தொட்டு இன்றுவரை நடைபெறுகின்றது. தமது கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிக்க மற்றொருவரை தூதாகஅனுப்புதல் உண்டுஅக இலக்கியத்திலும் புறஇலக்கியத்திலும் தூது அனுப்புதல் இருந்துள்ளதை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. இதனைத் தொல்காப்பியர். ஊடல் தீர்க்கும் வாயில்கள் எனக் குறிப்பிடுகின்றார்.21 இவ்வாறு தூதாக அனுப்பக்கூடியவை உயர்திணைப் பொருளாகவும், அஃறிணைப் பொருளாகவும் இருக்கலாம். தலைவனோ அல்லது தலைவியோ காதல் மீதூர்ந்த நிலையிலும் ஒருவரை ஒருவர் காணாத நிலையில் பிரிவுத் துன்பம் மிக்க நிலையிலும் தூது விடுப்பது நிகழ்கின்றது. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் தம்மைப் பராங்குச நாயகியாகப் பாவித்து எம்பெருமானாகிய தலைவனைப் பிரிந்து துன்பம் அதிகமான நிலையில் காதல் மீதூரும் போதும். தன் ஆற்றாமை நிலையை எடுத்துக் கூறி வண்டு , குருகு, தும்பி, பறவைகள் வேய்ங்குழல், இளம்பிறை, தென்றல் அன்றில் குரல், நெஞ்சம், பிறை முதலியவற்றைத் தூதாக விடுத்து, எம்பெருமானை அழைத்து வருமாறும், பெருமானிடம் உள்ள துழாய் மாலையை வாங்கி வருமாறும் அஃறிணைப் பொருள்களிடம் வேண்டுகிறாள் தலைவி.22

**பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்**
**துனிமலி துயரமோ டரும்பட ருழப்பொள்**
**சையறு நெஞ்சிற்கு சா அத்துணை யாகச்**
**சிறுவரைத் தங்குவை யாயின்**
**காண்குவை மன்னாற் பாணவெற் தேரே**

**( ஐங்குறு.பாடல்.477)**

என்ற பாடலடிகள் தலைவியின் தீது பற்றி எடுத்துரைக்கின்றன தூது அனுப்புவோறும் தூதாகச் செல்சோறும் அதனைப் புரிந்த அந்நபரிடம் தான் கூறவந்த செய்தியை கூறும்நிலையில் உள்ளவாறே அவற்றை வெளிப்டுத்த இயலும். ஆனால், அஃறிணைப் பொருள்கள் அத்தகைய உணர்வு பெறவில்லை, யாயினும், முன்னிலைப் படுத்திக் கூறுவது ஒருமரபாக வழிவழியாக சங்கஇலக்கியம் தொட்டு புலவர்களால் கையாளப்பட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது. இதனைத் தொல்காப்பியர்,

**சொல்லா மரபின் அவற்றோடு கெழீஇச்**
**செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்**

**( தொல்.பொருள்.3)**

என்ற நூற்பாவின் மூலம் விளக்குகிறார். என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் சான்றாக அமைந்துள்ளது. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் தம்மை பராங்குச நாயகியாக எம்பெருமான் மீது விடுக்கும் தூது. தூது முனிவின்மை என்ற வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. என்ற பாடலில் தலைவியின் தூது முனிவின்மையை எடுத்துக் காட்டுவதாக

அமைந்துள்ளது. தன்துணையை விட்டுப் பிரியாமல் இருந்து மலர்கள் விரியும் போது சேர்ந்தே தேன் உண்ணும் வண்டினங்களையும், திருவாலிக் கழனியில் வாழும் நீண்ட அலகினை உடைய குருகினங்களையும், தன் மேனியால் பசலை பாய்ந்தலையும், கைவளையல்கள் கழல்வது பற்றியும் எம்பெருமானிடம் தன் மனநிலைளை எடுத்துச் சொல்லுமாறு வேண்டுகிறாள் தலைவி. என்ற பாடலில் தலைவி வண்டினைத் தூதாக அனுப்புவதை காணமுடிகின்றது.

**நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டோமால்**

**சிலம்பு.கானல்.வரி-32**

என்ற பாடலில் ஆழ்வார் தம்மை பராங்குச நாளகியாகப் பாவித்து திருக்கண்ணபுரத்தில் உறைந்திருக்கும் எம்பெருமானுக்குத் தானுற்ற காதல் நோய் பற்றி எடுத்துக் கூறுமாறு நாரையைத் தூதாக விடுப்பதை அறிய முடிகின்றது. சங்க இலக்கியக் காலம் தொட்டு பக்தி இலக்கிய காலம் வரை தூது என்பது தலைமக்க்கிடையே நல்லுறவை ஏற்படுத்த வல்ல கருவியாய் செயல்பட்டிருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. ஆழ்வார் தம்மை நாயகியாகப் பாவித்து இயற்றிய பாடல்கள் யாவும் அடியார் தம்முள் உறைந்திருக்கும் இறைவனை அடைதலுக்கான வழிமுறைகளை எடுத்துக் கூறுவதாக பாசுரங்கள் அமைந்துள்ளன. இறைவனைச் சேராதிருக்கும் ஆன்மாவை இறைவனை அடைய முற்படுதலுக்கு வழிவகை செய்கின்றன. உலகியல் பொருட்களிடம் பற்று கொண்டு இறைவனை அறியாது உழன்றிருக்கும் ஆன்மாக்களை, அணவம், கனமம், மாயையிலிருந்து விடுவித்து. சிற்றின்ப நிலையிலிருந்து பேரின்பமான பதியிடம் சேரச் செய்வதற்கு முந்துறுத்துகின்றன. ஆண் தன்மை விடுத்து பெண்தன்மை பூண்டு, திருமாலை நாயகனாக அமைத்துப் பாடியதற்குக் காரணம் திருமாலின் மீது செலுத்திய அளவற்ற பக்தியின் வெளிப்பாடே என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. பக்தி இலக்கியத்தில் புது உத்தியாக தூதுணைப் பயன்படுத்தியுள்ளார்கள் ஆழ்வார்கள். பதியாகிய தலைவனை எண்ணித் தலைவி தூதாக காக்கைக் குஞ்சிகளையும், பூங்குயிலையும், பல்லிக் குட்டியையும், கிளியையும், தலைவி தூதாக விடுக்கிறாள். கோழி, கூ எனக் கத்துகிறது.33 என்று தலைவி பல்லியையும், பறவைகளையும் முன்னிலைப்படுத்தி கூறுவது மிகவும் இன்பமயமாய் அமைந்துள்ளது.

(பெரிய.திரு.10.10.4 என்ற பாடல் மிகுந்தாக அமைந்துள்ளது சங்க இலக்கியம் தொட்டு இது வரையிலும் பல்லி நல்நிமிர்தம், தீநிமித்தம் பற்றி அறியப்பட்டுளதை இலக்கியங்கள் மூலம் உணரமுடிகின்றது. சங்க இலக்கிய காலம் போலவே, பக்தி இலக்கிய காலத்திலும் தூதுவிடும் மரபு தொடர்ந்து வந்துள்ளதை பெரிய திருமொழிலும் காணமுடிகின்றது. தூதாக அஃறிணைப் பொருட்களுள் பல்லிக்குட்டியை அனுப்புதல் புதிய தூதுமரபாக இடம்பெற்றுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**நூழை நுழையும் பொழுதின் தாழாது**
**பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென**
**மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து**

**(நற்.பா.எ.98)**

என பல்லி நிமிர்தம் பார்த்தலுக்கு சான்றாக நற்றிணை பாடல் அமைந்துள்ளது.

## தலைவி பிரிவாற்றாமை

தலைவி தலைவனைப் பிரிந்த போது அற்றாமை காரணமாக வருந்தும் போது அன்றில் பறவையும், தென்றல் காற்றும் என்மீது பட்டு துன்புறுத்துவதால் இரவு முழுவதும் உறங்காமல் எம்பெருமானை நினைத்து வருந்துகின்றேன். மேலும் வாடைக் காற்று காளையின் மணியோசையும், கோபாலர்கள் குழலோசையும் இயற்கைக் குணங்களையெல்லாம் கொள்ளை கொண்டு போவதற்குரிய பசலை நோயை அளித்துச் சொன்றாய். எம்பெருமானுடைய மனதை அறிந்து கொண்டு குறுங்குடிக்கே என்னை அனுப்பி விடுங்கள் எனத் தலைவி தோழியடம் புலம்புகிறாள்.36 என்ற பாடல் தலைவியின் தனிமையைச் சுட்டுகிறது. என ஐந்திணை ஏழு பாடலும், சான்றாக அமைந்துள்ளது. தலைவனைப் பிரிந்த தலைவி

*தன் ஆற்றாமை காரணமாக தலைவனிடம் செல்லத் துணிந்து தன் நெஞ்சையும்.40 தோழியையும் 41 துணையாகக் கொண்டு எம்பெருமான் உறைந்திருக்கும் திருப்புல்லாணி சென்று வணங்கினால் தீரும் எனத் தலைவி உரைக்கின்றாள்.*

***அரிதரோ தேற்ற மறவுடையார் கண்ணும்***
***பிரிவோ ரிடத்துண்மை யான்***

***(திருக்குறள்.1153)***

*என்ற குறள் பிரிவின் அருமையைச் சுட்டுகிறது. அன்றில் பறவையின் ஓசை, ஆயர்கள் ஊதும் புல்லாங்குழல், காளையின் மணியோசை, எல்லியல் மாருதம், கடலோசை, கங்குல், வாடை, அன்னை முனிவு, வாடைக் காற்று, வளைசோர்வு, களவுப் புணர்ச்சியின் நினைவு, காமன் தரும்.*

**தொகுப்புரை**

*பக்தி இலக்கியங்களில் அகமரபுக் கூறுகள் பெரும்பாலும் காணப்படுகின்றன. தேலைவி, தோழி, நற்றாய், செவிலி, பாங்கன், கட்டுவிச்சி முதலானோர் கூற்றுகளே அதிகமாக இடம்பெற்றுள்ளன. தி தலைவன் கூற்று அரிதாகவே காணப்படுகின்றது. காரணம் தலைவன் இறைவன் ஆகையால் திருமங்கையாழ்வார் தலைவியாக நின்று தலைவனை முன்னிறுத்தி பாசுரங்களை இயற்றியுள்ளார் என்பது புலனாகின்றது.*

*உருவ வெளிப்பாட்டு தோற்றம் காணுதல் அகஇலக்கிய மரபில் தலைவனுக்குரியதாக கூறப்பட்ட ஒன்று, பக்தி இலக்கியத்தில் தலைவிக்கு உரியதாக ஒன்றாக அமைத்துப் பாடியுள்ளது அக மரபை மீறிய பாடல்கள் என்றாலும் இறைவன் பொருட்டு பாடப்பட்டுள்ளது என்பதால் இவை அறிந்து கொள்ள முடிகின்றது.*

*பக்கி இலக்கியப் பாடல்களின் பிரிவு ஆன்மவிடுதலை ஆகும், ஆன்மாக்கள் பேரின்பமயமான இறைவனை அடையப் பெறுதலே மேட்சம் எனப் பெறுகிறது.*

*ஆழ்வார்கள் தமது நிலையிலிருந்து மாறி, பெண்தன்மை பூண்டு மாயையில் உழன்று கொண்டிருக்கும் ஆன்மாக்களை கடைத்தேற்றுதற்கு வணங்கும் வழிமுறைகளைப் பாசுரங்கள் வழி எடுத்துரைக்கின்றார்.*

*சங்க இலக்கியம் தொட்டு பக்கி இலக்கிய காலம் வரை தூது தலைமக்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் கருவியாய் செயல்பட்டுள்ளதை ஆழ்வாரின் பாடல்களில் காணமுடிகின்றது.*

*சங்க இலக்யத்தில் இருந்த இன்று வரைக்கும் நிமிர்தம் பார்க்கும் வழக்கம் இருப்பதை நாம் அறியலாம் ஆனால் அஃறிணைப் பொருட்களை தூது விடும் மரபு காணப்பட்டாலும், பல்லிக்குட்டயை திருமங்கையாழ்வார் இறைவனுக்காக தீது அனுப்பிளுளதைக் கானும்பொழுது புதிய மரபாக மாற்றம் கொண்டுள்ளதைக் காணமுடிகின்றது.*

*தலைவனைப் பிரிந்து ஆற்றாலாதிருக்கும் தலைவியைப பற்றிக் கூறவிழையும் தாள் கூற்றில், ஆழ்வார் அவர் காலத்துப் பழிமொழிகளை அகப்பொருள் நுணுக்கங்கள் அமையப் பாடியுள்ளமை அறியமுடிகின்றது.*

*நற்றாய் தலைமக்களை நோக்கி கூற்று நிகழ்த்தும் மரபு பழங்கால மரபிலக்கண நூல்களில் இடம்பெறவில்லை தலைவனிடமும், தலைவியிடமும், நற்றாய் கூற்று நிகழ்த்துவதாக திருமங்மங்கை ஆழ்வார் பாசுரங்களில் அமைந்துப் பாடியுள்ளார். பண்டைய மரபின் வளர்ச்சி நிலைலையாக இதனைப் கூறலாம்.*

*சங்க இலக்கியங்களில் தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவன் இருக்கும் இடம் தேடிச் செல்வேன் என்று கூறும் மரபினை ஆழ்வாரின் பாசுரங்களில் வெளிப்படுத்துகின்றன. பழ இலக்கியங்களின் வளர்ச்சி நிலையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.*

*தோழியிடம் குறையிரந்து நிற்கும் போது, தோழி குறைமறுக்க தலைவன் மடலேறுவேன் எனக் கூறுவது சங்க இலக்கிய மரபு பக்தி இலக்கியத்தில் பெண் தன்மை பூண்டு இறைவனைக் அடைய விரும்பிய தலைவி மடலேறுவேன் எனக் கூறுவது புதிய மரபாக அமைந்துள்ளது.*

பக்தி இலக்கியத் தொடக்கத்தில் ஆடவர் மடலேறுவதாக அமைத்துப் பாடப்பெற்ற மரபு பெண் மடலேறுவதாக மாற்றியமைத்துப் பாடப்பட்டுள்ளது.

இம்மடல் எனும் அகப்பொருள் மரபை சிற்றிலக்கிமாக மாற்றியமைத்த பெருமை திருமங்கை ஆழ்வாரையே சாரும்

சங்க இலக்கியங்கள் ஆண் மடலேறு தலையே பெரிதம் பேசுகின்றன. தமிழ் நெறியில் பெண்கள் மடலேறுதல் இல்லை என்பது தொல்காப்பிய மரபு எனினும் மடலேறத் துடிக்கும் மங்கையை ஆழ்வார் அறிமுகம் செய்துள்ளமை வியக்கத்தக்க ஒன்றாகும்.

திருமங்கை ஆழ்வார் பரகால நாயகியாக நின்று மடலேறப் போவதாக இறைவனை அச்சுறுத்துகிறாள்.

திருமங்கை ஆழ்வாரின் சிறியதிருமடலும், பெரியதிருமடலும் தலைவனைப் பிரிந்த தலைவியின் துன்பமயமான நிலையைப் பற்றி கூறுகின்றன.

தலைவனைப் பெறவிழையும் தலைவியின் கூற்றில் இறைவனின் வடிவழகு அவனது பெருமைகள் முதலியவற்றை சிறப்பிப்பதாக அமைந்தள்ளது.

உலக வாழ்க்கையின் மீது பற்று கொண்ட மக்களை பக்தி நெறியில் செலுத்தி பேரின்பத்தை பெற வழிகாட்டுகின்றன.

**துணைநூல் பட்டியல்**

1. ஆ. தனஞ்செயன் சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலிலும் பரிசல் புத்தக நிலையம் 235. பிளாக் முதல்தெரு அரும்பாக்கம். சென்னை - 600 086
2. சு. வித்தியானந்தன் தமிழர் தமிழர் சால்பு குமரன் புத்தக இல்லம் கொழும்பு. சென்னை.6
3. அ. தட்சிணாமூர்த்தி சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிட் சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை- 600098
4. க. தனிநாயகஅடிகள்நிலஅமைப்பும்தமிழ்க் கவிதையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிட் சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை- 600098.